Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 11, 2023

செவ்வாய்க்கிழமை ஜூலை 11, 2023 | ஒளி: 09 கதிர்: 037 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு★ | Free









### மன்னம்பிட்டி, அம்பன்பொல, ஹெல்பொட, தலவாக்கலை

# 4 கோர விபத்துகளில் 13 பேர் பலி; 105 பேர் காயம்

நாட்டின் பல பகுதிகளிலும் ஞாயிறுக்கிழமையும் (09) திங்கட்கிழமையும் (10) இடம்பெற்ற 4 வெவ்வேறு விபத்துகளில் 13 பேர் உயிரிழந்துள்ளதுடன், 105 பேர் வரை காயமடைந்துள்ளனர்.


**மன்னம்பிட்டி**

மன்னம்பிட்டியில் ஞாயிறு (09) இரவு 8 மணியளவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் ஒரு பெண் உட்பட 11 பேர் பலியாகியுள்ளதுடன் 42 பேர் காயமடைந்து பொலன்னறுவை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னம்பிட்டி, கொட்டடி பாலத்தில் தனியார் பஸ் விழுந்து விபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணித்த 10 பேர் ஸ்தலத்திலேயே மரணித்துள்ளதுடன் சிகிச்சை பெற்றுவந்த பெண் ஒருவரும் மரணித்துள்ளார். மேலும் 42 பேர் காயமடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## அறிக்கை கேட்டார் ஆளுநர் செந்தில்



வடமத்திய மாகாண பொலன்னறுவை - கதுருவெல பகுதியிலிருந்து காத்தான்குடிக்கு சென்ற பஸ் ஒன்று மன்னம்பிட்டி பகுதியில் விபத்திற்குள்ளாகியுள்ளது.கிழக்கு மாகாணத்தை சேர்ந்த பயணிகள் அதிகமானோர் பயணித்த இந்த பஸ், பொலன்னறுவை மாவட்டத்தில் விபத்துக்கு உள்ளாகியுள்ள நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், போக்குவரத்து அதிகார சபை

தொடர்ச்சி P2

## பசில் குழுவினர் தம்மை சுத்தப்படுத்தும் முயற்சியை முறியடிக்க வேண்டும்



மொட்டு கட்சியையும் இன்னும் தெளிவாக குறிப்பிடுவதாக இருந்தால் பசில் ராஜபக்ஷ குழுவினர், தம்மைச் சுத்தப்படுத்தி நல்லவர்களாகக் காண்பிக்க எடுக்கும் முயற்சியை தோற்கடிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி

தொடர்ச்சி P2

## இ.போ.சவால் புதிய செயலி அறிமுகம்

பயணிகளுக்கு நீண்ட தூர பஸ் அட்டவணையை அடையாளம் காண உதவும் திறன்பேசி மற்றும் இணைய அடிப்படையிலான செயலி பயன்பாட்டை இலங்கை போக்குவரத்து சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் பந்துல குணவர்தனவால் இந்தச் சேவை திங்கட்கிழமை (10) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இது இலங்கையின் மிகப்பெரிய ஒன்லைன் பஸ் முன்பதிவு தளம் என்றும், இது நாடு முழுவதும் மில்லியன் கணக்கான இலங்கையர்கள் பயணிக்கும் மற்றும் இருக்கைகளை முன்பதிவு செய்யும் முறையை மாற்றும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## தமிழக மீனவர்கள் குறித்து ஸ்டாலின் அவசர கடிதம்



இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 15 பேரையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளை எடுக்கக் கோரி, மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர் ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில், “தமிழ்நாட்டைச் சேர்ந்த 15 மீனவர்கள், இரண்டு படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற நிலையில், ஞாயிற்றுக்கிழமை (09) இலங்கை கடற்படையினரால் கைது செய்ய

தொடர்ச்சி P2

### தமிழர்களுக்கான தீர்வு வரைவில்

## ஏனைய மக்களின் பங்கும் உள்ளடக்கம்

**கனகராசா சரவணன்**



வடக்கு, கிழக்கில் ஈழத் தமிழர்கள் சார்ந்து எவ்வளவு முதன்மை படுத்தப்படுகின்றதோ அதேயளவு முஸ்லிம், சிங்கள, மலையக மக்களுக்கும் உரித்துடைய பங்கினை இந்த வரைபில் உள்ளடக்கியுள்ளதாக மக்கள் சிந்தனை மைய இணைத்

தொடர்ச்சி P2



## தங்கமும் டொலரும் மீண்டும் உயர்ந்தன

இலங்கை ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலர் மற்றும் தங்கம் ஆகியவற்றின் பெறுமதி திங்கட்கிழமை (10) அதிகரித்துள்ளதாக தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 304 ரூபாய் 02 சதமாகவும் விற்பனை விலை 318 ரூபாய் 23 சதமாகவும் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2

## 15 நாணய மாற்றுநர்களின் அனுமதி பத்திரங்கள் இரத்து




2022ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் நிபந்தனைகளுடன் இணங்கி செயற்படாமை காரணமாக 15 நாணய மாற்றுநர்களின் நாணயப் பரிமாற்றல் அனுமதிப் பத்திரங்களை 2023ஆம் ஆண்டுக்கு புதுப்பிக்காதிருப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

### ‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ கப்பல் விபத்து

## இழப்பீடு குறித்த முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்கவும்

### சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவு



‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ கப்பல் விபத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்குமாறு, சட்டமா அதிபருக்கு உயர்நீதிமன்றம், திங்கட்கிழமை (10) பணிப்புரை விடுத்தது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்து

தொடர்ச்சி P2

## இறக்குமதி கட்டுப்பாடுகள் உட்பட அனைத்தும் நீங்கும்



பொருளாதாரம் சரியான திசையில் செல்வதால், கடந்த ஆண்டு விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகள் உட்பட எஞ்சியுள்ள கட்டுப்பாடுகள் எதிர்வரும் காலங்களில் தளர்த்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடத்தை விட நாட்டின் நிலைமை கணிசமாக மேம்பட்டுள்ளதாகவும்

தொடர்ச்சி P2

### கிளியில் 4 சிசுக்கள் மரணம்

## அறிக்கை கோரியது சுகாதார அமைச்சு




கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் 4 சிசுக்கள் உயிரிழந்தமை தொடர்பில் சுகாதார அமைச்சு அறிக்கை கோரியுள்ளதாகவும் குறித்த விசாரணை அறிக்கை, கிளிநொச்சி வைத்தியசாலையின் பணிப்பாளரால் தமக்கு கையளிக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

### ஒரு வருடத்துக்குள் ஜனாதிபதி

## நாட்டை சரியான பாதைக்கு கொண்டு சென்றுள்ளார்



உலக நாடுகள் பலவும் போராட்டங்களின் காரணமாக முடங்கிப் போயுள்ள நிலையில், ஒரு வருடத்திற்குள் அந்தச் சவால்களை வெற்றிக்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சரியான தலைமைத்தால் முடிந்துள்ளது என்றும் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தி சரியான பாதைக்கு இந்நாட்டை இட்டுச் சென்றுள்ளார் என்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சொந்த வீட்டுக்குத் தீ மூட்டியிருந்தமை, பொதுச் சொத்துகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் சொத்துகளுக்கு சேதம்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 4 கோர விபத்துக்களில் 13 பேர் பலி; 105 பேர் காயம்

குறித்த விபத்துச் சம்பவத்தில் சிலர் காணாமல் போயிருக்கலாமென நம்பப்படும் நிலையில், காணாமல் போனோரைத் தேடும் பணிகள் திங்கட்கிழமை (10) காலை கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டது.

### அம்பன்பொல

அம்பன்பொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் திங்கட்கிழமை (10) காலை இடம்பெற்ற விபத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன் 29 பயணிகள் காயமடைந்துள்ளனர்.

யாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டு பாதெனியவிலிருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த பஸ், வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தி மீது மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் தலாவ பகுதியைச் சேர்ந்த 32 மற்றும் 71 வயதுடைய இருவர் உயிரிழந்துள்ளதுடன் 29 பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### ஹெல்பொட

புத்தளத்திலிருந்து - நுவரெலியாவுக்கு சுற்றுலா சென்ற சொகுசு பஸ், கம்பளை - நுவரெலியா பிரதான வீதியின் ஹெல்பொட பகுதியில் விபத்துக்குள்ளானதில் 8 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக புஸ்ஸல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் நால்வர் கொத்மலை பிராந்திய வைத்தியசாலையிலும் மேலும் நால்வர் புஸ்ஸல்லாவ வஹுகபிட்டிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கத்தால் இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளின் ஊடாக தெரியவருகின்றது என்று தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

### தலவாக்கலை

தலவாக்கலை, வட்டகொடையில் இருந்து மடக்கும்புர வரையிலும் பயணித்துக்கொண்டிருந்த தனியார் பஸ், துனுக்கே தெனிய, கிரிதியெட்டி பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (09) மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் பஸ்ஸில் பயணித்த 26 பேர் காயமடைந்துள்ளனர் என பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற போது, அந்த பஸ்ஸில் 26 க்கும் மேற்பட்டோர் பயணித்துள்ளனர் என்றும் காயமடைந்தவர்கள் கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறியமுடிகின்றது. அத்துடன், காயமடைந்த பெண் தொழிலாளர்கள் சிலர், நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

வட்டகொடை தோட்டத்தில் வேலை செய்வதற்காக வேவஹேன பிரதேசத்தில் இருந்து ஒருதொகுதி தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு அவர்களுடைய வீடுகளுக்கு மீண்டும் அழைத்து வந்து கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்றும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

# அறிக்கை கேட்டார் ஆளுநர் செந்தில்

பணிப்பாளரை விபத்து இடம்பெற்ற இடத்திற்கு விரைந்து சென்று, விபத்து குறித்து ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும் விபத்துக்குள்ளானவர்களுக்கு தேவையான அவசர உதவிகளை உடனடியாக வழங்குமாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

விபத்தில் பாதிப்படைந்த மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்க மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்ததுடன், இவ்விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கான சிகிச்சையை விரைவுபடுத்துமாறு தெரிவித்தார். விபத்தில் உயிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்ததுடன், விபத்தில் உயரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளார்.

# பசில் குழுவினர் தம்மை சுத்தப்படுத்தும் முயற்சியை முறியடிக்க...

தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். எதிர்க்கட்சி ஒன்றியத்தின் வாராந்த செயற்குழுக் கூட்டம் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் திங்கட்கிழமை (10) இடம் பெற்றபோது கருத்துத் தெரிவிக்கையிலையே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த வார பாராளுமன்ற அமர்வை நோக்கும் போதும் பசில் ராஜபக்ஷவின் கும்பல், ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற மேலும் இரு வாரங்களுக்கு இழுத்தடிப்புச் செய்யும் பிரயத்தனத்தை முன்னெடுத்தாலும், எதிர்க்கட்சியில் எண்ணிக்கை குறைவாக காணப்பட்டாலும் எதிர்க்கட்சியின் முயற்சியால் குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டதாகவும் இதற்கு ஒத்துழைப்பு நல்கிய எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகலருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

போராட்ட காலத்துக்கு பிற்பாடான இந்த விடுபாட்டு காலப்பகுதியில் தமக்கு சார்பானவர்களை, தமது பிரதிநிதிகளை பயன்படுத்தி தம்மை சுத்தப்படுத்தி, நல்லவர்களாக காண்பிப்பதற்கான முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள இந்தத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் சகல எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அதிலிருந்து விலகி எதிர்க்கட்சியாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து, சபாநாயகர் அண்மையில் தெரிவித்ததன் பிரகாரம், எதிர்க்கட்தித் தலைவருக்கு பாராளுமன்றத்தில் சிறப்புரிமைகள் காணப்படுகின்றமையால் தனது தலைமையில் இந்தப் பொருளாதார சீரழிவுக்கான காரணங்களை கண்டறிய, எதிர்க்கட்சியின் தெரிவுக்குழுவொன்றை ஸ்தாபித்து இதனை முன்கொண்டு செல்வோம் என்றும் அழைப்பு விடுத்தார். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 225 பேருக்கும் இதில் பங்கேற்க அழைப்பு விடுப்பதாகவும், சகலருக்கும் இதில் கேள்வி எழுப்பும் சந்தர்ப்பம் இருப்பதாகவும், இதற்கு எத்தகைய தடைகளும் தெரிவிக்கப்படாது என்றும் தெரிவித்தார். நாட்டின் பொருளாதார வங்குரோத்துக்கான காரணங்களை கண்டறியும் அரசாங்கத்தின் தெரிவுக்குழுவிற்கு பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் நியமிக்கப்பட்டமை பிரச்சினைக்குரிய விடயம் என்றும் சுட்டிக்காட்டினார்.

# தமிழக மீனவர்கள் குறித்து ஸ்டாலின் அவசர கடிதம்

படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இச்சம்பவம் தமிழ்நாட்டிலுள்ள மீனவ சமூகத்தினரிடையே மன உளைச்சலையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்திய - இலங்கைக் கடல் எல்லையை ஒட்டிய பகுதிகளில் மீன்பிடித் தொழிலை நம்பியே பல்லாயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரம் அடங்கியுள்ளதை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் நன்கு அறிவார்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நமது மீனவர்களை உடனடியாக விடுவிக்கவும், பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து மீன்பிடிப் படகுகளைத் திரும்ப ஒப்படைக்கவும் ஒன்றிய அரசு, இலங்கை அதிகாரிகளுடன் தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# ஏனைய மக்களின் பங்கும் உள்ளடக்கம்

தலைவரும் யாழ். பல்கலைக்கழக அரசியல்துறை தலைவருமான பேராசிரியர் கே.ரி கணேசலிங்கம் தெரிவித்தார்.

இதன் ஊடாக ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கான அங்கிகரிக்கப்பட்ட ஒரே தீர்வாக இந்த வரைவு உள்ளடக்கவேண்டும் என்று முன்னெடுத்துவருவதாகவும் குறிப்பிட்டார்.

மக்கள் சிந்தனை மையம், தமிழ் மக்களின் தீர்வாக அமையக்கப்படும் வரைபு தொடர்பாக, கிழக்கு மாகாணத்திலுள்ள சிவில் அமைப்புக்களுடனான கலந்துரையாடல் மட்டக்களப்பு ஈஸ்ட்லகுன் ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சிவில் அமைப்புகள், அதிகமான விடயங்களை தெரிவித்துள்ளதுடன் எதிர்காலத்தில் உள்ளடக்கங்களை வலிமைப்படுத்துவதற்கும் ஆரோக்கியமான உரையாடலை செய்துள்ளனர்.

எனவே, இந்த வரைபு ஈழத் தமிழர்களுடைய அரசியல் சார்ந்திருக்க கூடிய தீர்வாக அரசியல் கட்சிகள் சிவில் அமைப்புகள், புலம்பெயர்ந்த அமைப்புகள் அனைவருக்கும் இடையிலான பொதுவான ஓர் அங்கிகரிக்கப்பட்ட ஒரே தீர்வாக இந்த விடயத்தை முதன்மைபடுத்துவதற்கான நோக்கம் கொண்டு இந்த மக்கள் சிந்தனை மையம் ஏற்படுத்தியுள்ளது

இலங்கை அரசாக இருக்கலாம் அல்லது அரசுடன் பயணிக்க கூடிய பிற சக்திகள் மற்றும் புலம் பெயர்ந்த தளத்தில் உள்ள அமைப்புகள் உடன் உரையாடலை செய்து இந்த வரைவை முதன்மைபடுத்துவதுடன் 2009 பின்னர் இந்த மக்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய எண்ணங்களை அபிப்பிராயங்களையும் முதன்மைபடுத்தி பெருமளவுக்கு இந்த வரைபை முழுமைப்படுத்தியுள்ளனர்.

இந்த வரைபின் உள்ளடக்கம் ஒரு கூட்டு சமஸ்டி குறித்து 3 விடயங்களை முதன்மைபடுத்தியுள்ளோம்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் இந்த வரைபை முழுமைப்படுத்தி அதற்கு கீழ் ஓர் உரையாடலை செய்வது அது சாத்தியப்படாதபோது ஒரு கூட்டு சமஷ்டிக்குரிய வலிமை என்பதை முதன்மை படுத்தியுள்ளோம். அத்தகைய அம்சங்களை செயற்படுத்தும் சூழல் சாத்தியப்படாத போது, ஈழத்தமிழர்கள் தங்களுடைய சுயநிர்ணயம் சார்ந்த விடயங்களில் சில தீர்மானங்களை எடுக்க சந்தர்ப்பம் வருகின்றபோது, ஒரு பொது வாக்கெடுப்பை நோக்கி போவதற்கான எண்ணத்தையும் இந்த வரைபு முதன்மையான அம்சத்தை கொள்ள திட்டமிட்டுள்ளது" என்றார்.

# நாட்டை சரியான பாதைக்கு கொண்டு சென்றுள்ளார்

விளைவிக்கப்பட்ட தினமாக மே 09 ஆம் திகதி வரலாற்றில் இடம்பிடித்துள்ளதெனவும், போராட்டங்களின் பின்னால் காணப்பட்ட நிகழ்ச்சி நிரல் என்னவென்பது தற்போது தெரியவந்துள்ளது எனவும் கூறினார்.

'ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் ஞாயிறு (09) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அளுத்கமகே, பணவீக்கம், வங்கி வட்டி, மின் கட்டண குறைப்பு, வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் வருகை, ஏற்றுமதி, பங்குச் சந்தை, வெளிநாட்டு கையிருப்பு வீதம் என்பவற்றில் முன்னேற்றத்தை அவதானிக்க முடிவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"அதேபோல், அதற்கான போராட்டங்களின் முக்கியமான சில நோக்கங்களையும் அவதானிக்க முடிந்தது. அதற்காக இந்நாட்டு மக்கள் ஒன்று திரண்டனர். 13 மணித்தியால மின்வெட்டு, அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மக்கள் முகம்கொடுத்தனர். இருப்பினும் அரச சொத்துகளையும் அழிப்பதற்கும், வீடுகளை தீ வைப்பதற்கும், கொலைகளைச் செய்யவும் மக்களுக்கு அவசியம் இருக்கவில்லை. மாறாக போராட்டங்களில் பங்கேற்ற மக்களுக்கு சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கும் நோக்கம் இருக்கவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவும் மேற்படி போரட்டங்களின் பின்னணியில் நின்றன. அந்தப் போராட்டங்கள் நிறைவுற்ற ஒரு வருட காலத்தில் நாட்டில் என்ன நடந்தது என்பது தொடர்பில் மக்களுக்கு தற்போது தெளிவாகியுள்ளது.

தற்போதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது சொந்த வீட்டை கொழும்பு ரோயல் கல்லூரிக்கு தியாகம் செய்துள்ளார். அத்தகைய வீடும் ஜனாதிபதியின் அன்புக்கு பாத்திரமான நூலகமும் தீமுட்டப்பட்டதும் இதுபோன்தொரு நாளிலாகும்.

ஆனால் அவ்வாறானதொரு சூழலில் எவரும் சவாலை ஏற்றுக்கொள்ள முன்வராத போது, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டார். அந்த நேரத்தில் நாம் வங்குரோத்து அடைந்த நாடு. தொடர் மின்தடை, எரிபொருள் விநியோகம் தடைப்பட்டுப் போனது, படுகடனை திருப்பிச் செலுத்த இயலுமை இல்லை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தலையெடுத்திருந்தன.

அதேபோல் பணவீக்கம் 67% சதவீமாக காணப்பட்டது, 67% சதவீதமாக காணப்பட்ட பணவீக்கம் 7% சதவீதம் வரையில் குறைவடைந்திருக்கிறது என்றார்.

# தங்கமும் டொலரும்...

22 கரட் தங்க பவுண் கிட்டத்தட்ட 3 ஆயிரம் ரூபாயாலும் 24 கரட் 4 ஆயிரம் ரூபாயாலும் அதிகரித்துள்ளதாக கொழும்பு செட்டிதெரு தங்க விற்பனை தகவல்கள் குறிப்பிடுகின்றன.

147 ஆயிரம் ரூபாயாக இருந்த 22 கரட் தங்கத்தின் விலை 151 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளதுடன், 160 ஆயிரம் ரூபாயாக வீழ்ச்சியடைந்த 24 கரட் தங்கத்தின் விலை 164 ஆயிரம் ரூபாவை நெருங்கியுள்ளது.

# இறக்குமதி கட்டுப்பாடுகள்...

ஹோமாகமவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

இலங்கை நிலையான வளர்ச்சியை அடைவதற்கு சில சீர்திருத்தங்கள் மற்றும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என குறிப்பிட்ட அவர், சர்வதேச சமூகத்தின் முன் இலங்கைக்கு தற்போது சிறந்த மரியாதை உள்ளது என்றார்.

சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் சர்வதேச அமைப்புகளும் ஏனைய நாடுகளும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக குறிப்பிட்டார்.

கடனை திருப்பி செலுத்துவதற்கு இந்திய அரசாங்கம் நீண்ட கால அவகாசம் வழங்கியுள்ளதாகவும் அதேவேளை சர்வதேச நிறுவனங்களின் உதவியை அரசாங்கம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

# 15 நாணய மாற்றுநர்களின்...

இவ்வறிவித்தலானது உரிய நாணய மாற்றுநர்களுக்கு 2023.02.22ஆம் திகதி அன்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி திங்கட்கிழமை (10) வெளியிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கீழே குறிப்படப்பட்டுள்ள கம்பனிகள் நாணயப் பரிமாற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இனிமேலும் அனுமதிக்கப்படவில்லை என்றும் அத்தகைய கம்பனிகளுடன் வெளிநாட்டு நாணயத்தை வாங்குதல், விற்பனை செய்தல் மற்றும் பரிமாற்றம் செய்தல் என்பன 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியதாகக் கொள்ளப்படும் என்றும் இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

அருண போரெக்ஸ் (பிறைவட்) லிமிடெட் -நுவரெலியா, பிரேசியா கிராமீன் (பிறைவட்) லிமிடெட் - நீர்கொழும்பு ஜெயா போரெக்ஸ் எக்ஸ்சேன்ஜ் (பிறைவட்) லிமிடெட் - கொழும்பு 03, கமல் என்டபிரைசஸ் (பிறைவட்) லிமிடெட் - கொழும்பு 01, குடாமடு மணி எக்ஸ்சேன்ஜ் (பிறைவட்) லிமிடெட்- மஹாவெவ ஆகிய நாணய மாற்றுனர்களின் பெயர்கள் பட்டியலில் சேர்கப்பட்டுள்ளது.

மேலும், மிட்னா மினி மார்கட் (பிறைவட்) லிமிடெட் - வென்னப்புவ, நியூ லங்கா கோல்ட் ஹவுஸ் (பிறைவட்) லிமிடெட் - ஹொரண, ரபீக்ஸ் ஜெம்ஸ் (பிறைவட்) லிமிடெட் - கொழும்பு 01, ரிம்ஹா ஜீவலேர்ஸ் (பிறைவட்) லிமிடெட்- புத்தளம், சலாகா டிரஸ்ட் இன்வெஸ்ட்மென்ட் (பிறைவட்) லிமிடெட்- கொழும்பு 02, ஷாரங்கா மணி எக்ஸ்சேன்ஜ் (பிறைவட்) லிமிடெட் - யாழ்ப்பாணம் ஆகிய மாற்றுநர்களும் பெயரிப்பட்டுள்ளனர்.

அத்துடன், சொர்ணம் போரெக்ஸ் (பிறைவட்) லிமிடெட்- கல்முனை, தமாஷா போரெக்ஸ் (பிறைவட்) லிமிடெட் - சிலாபம், யுனிவர்சல் மணி சேன்ஜர்ஸ் (பிறைவட்) லிமிடெட் -கொழும்பு 06, வசந்தாஸ் இன்டர்நெஷனல் மணி எக்ஸ்சேன்ஜ் (பிறைவட்) லிமிடெட்- கண்டி ஆகியவை பெயரிடப்பட்டுள்ளனர்.

# அறிக்கை கோரியது...

இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளுக்கமைய, குறித்த குழந்தைகள் உயிரிழந்தமைக்கு அந்த குழந்தைகளின் சுகாதார நிலைமையில் காணப்பட்ட பலவீனமே காரணம் என தெரியவந்துள்ளதுடன், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு ஜூன் மாத இறுதி வாரத்தில் பிரசவத்துக்காகச் சென்ற நான்கு தாய்மார்களின் சிசுக்கள் இறந்துள்ளதோடு தாய் ஒருவரின் கருப்பையும் அகற்றப்பட்டிருந்தது.

# இழப்பீடு குறித்த...

பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவில்லை என்று மனுதாரர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் அளித்த சமர்ப்பணங்களுக்கு இணங்க நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு கிடைக்கவில்லை என சரத் இத்தமல்கொட மற்றும் நீர்கொழும்பு மற்றும் சிலாபத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மீனவர்கள் சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

நீதியரசர் முர்து பெர்னாண்டோ தலைமையிலான நான்கு நீதியரசர்கள் அடங்கிய குழாம், இந்த மனுக்களை எதிர்வரும் ஒக்டோபர் 5 மற்றும் 6ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக அறிவித்தது.

கப்பல் விபத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்டஈடு வழங்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி சுற்றுச்சூழல் நீதிக்கான மையம், அருட்தந்தை சரத் இத்தமல்கொட மற்றும் நீர்கொழும்பு மற்றும் சிலாபத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மீனவர்கள் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

# இ.போ.சவால்...

செயலியின் மூலம் ஒன்லைனில் பஸ் பயணச்சீட்டு வாங்கும் சேவைகள் மூலம் மக்கள் ஆசனங்களை முன்பதிவு செய்ய முடியும் என்றார்.

'sltb.eseat.lk' என்ற இந்த இணையதளத்தின் மூலம் முன்பதிவு செய்யலாம் என்பதுடன், பஸ் அட்டவணைகள் தொடர்பான அனைத்து தகவல்களும் இணையதளத்திலும் செயலியிலும் கிடைக்கும் என்பதுடன் 24/7 செயற்படும் '1315' என்ற ஹொட்லைனும் அறிமுகப்படுத்தப்பட்டது.

# மல்லாவியில் துப்பாக்கிச் சூடு; இளைஞன் பலி

சண்முகம் தவசீலன்

மல்லாவி, பாலிநகர் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்த 23 வயதான இளைஞன் இடியன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மகேந்திரன் டிலக்சன் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். பாலிநகர் பகுதியில் இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் காரணமாகவே, இந்தத் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருக்கோவிலில் ஐந்து குடும்பங்களுக்கு புதிய வீடுகள்



எஸ். கார்த்திகேசு

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட திருக்கோவில் - 04 கிராம சேவையாளர் பிரிவில், சுனாமி மீள்குடியேற்ற கிராமமான மண்டானைக் கிராமத்தில், காணி மற்றும் வீடு இல்லாது வாழ்ந்து வந்த ஐந்து குடும்பங்களுக்கு கனடா சீடர்ஸ் நிறுவனத்தால் புதிய வீடுகள் நிர்மாணித்து, நேற்று (10) கையளிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரன் கலந்து கொண்டு, பயனாளிகளிடம் வீடுகளை கையளித்தார். அத்துடன், திருக்கோவில் உதவி பிரதேச செயலாளர் கே. சதிசேகரன், கனடா சீடர்ஸ் அமைப்பின் பிரதிநிதி திருமதி சுபாஜினி கிரிதரன், சமூக செயற்பாட்டாளர் எஸ். நந்தகுமார், கிராம சேவை உத்தியோகத்தர் எஸ். சடாச்சரம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். முரளிதரன் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கணக்காளரை கடத்தி கணக்கில் கை வைத்த பெண்

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியைச் சேர்ந்த எழுபது வயதுடைய கணக்காளர் ஒருவரின் காணியை கொள்வனவு செய்ய வந்த பெண் உள்ளிட்ட குழுவினர், குறித்த கணக்காளரை வேனில் ஏற்றி வலுக்கட்டாயமாக கடத்திச் சென்று, அவருடைய வங்கிக் கணக்கில் இருந்த பணத்தை தனது வங்கிக்கணக்கு மாற்றிக்கொண்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தன்னுடைய வங்கிக் கணக்குக்கு ரூ.15 இலட்சம் மாற்றப்பட்டதை அடுத்து, அவரை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு, அப்பெண் தலைமையிலான குழுவினர் தலைமறைவாகிவிட்டனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கணக்காளர் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். இந்தக் குழுவை வழிநடத்தியதாகக் கூறப்படும் பெண்ணை அடையாளம் கண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கணக்காளருக்குச் சொந்தமான காணி விற்பனைக்கு இருப்பதை அறிந்த பெண் உள்ளிட்ட குழுவினர், வேனில் வந்து இதனைச் செய்ததாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

குறித்த பெண் மற்றும் குழுவினரை கைது செய்வதற்கான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# பிள்ளையாருக்கு சூழி போட்டவருக்கு வலை

கோவிலில் இருந்த உண்டியலை எடுத்துச் சென்று, அதிலிருந்த பணத்தை எடுத்துக்கொண்டு வெற்று உண்டியலை கொண்டுவந்து அவ்விடத்திலேயே வைத்துவிட்டுச் சென்ற சம்பவமொன்று ஹட்டன், டிக்கோயாவில் இடம்பெற்றுள்ளது.

டிக்கோயா, வனராஜாவில் உள்ள விநாயகர் கோவிலுக்குள் இருந்த உண்டியலையே திங்கட்கிழமை (10) அதிகாலையில் ஒருவர் எடுத்துச் சென்று, மீண்டும் கொண்டுவந்து வைத்துள்ளமை சி.சி.ரி.வி கமெராவில் பதிவாகியுள்ளது என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.



திங்கட்கிழமை அதிகாலை 1 மணியளவில் கோவிலுக்கு வந்தவர், முன்னால் இருந்த இரும்பு படலையை உடைத்துக்கொண்டு கோவிலுக்குள் நுழைந்துள்ளார்.

அங்கிருந்த உண்டியலை வெளியே எடுத்துக்கொண்டு சென்றுள்ளார். உண்டியலை உடைத்து அதிலிருந்த பணத்தை எடுத்துவிட்டு, வெற்று உண்டியலை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு தப்பியோடியுள்ளார்.

உடைக்கப்பட்ட உண்டியலின் பூட்டு, கோவிலுக்கு முன்பாக ஓடும் ஹட்டன் ஓயாவில் கிடந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

15 நாள்களுக்கு ஒருதடவை உண்டியலை திறந்து, காணிக்கைகளை எடுத்துக்கொள்வதாகவும், அக்காலப்பகுதியில் சுமார் 30 ஆயிரம் ரூபாய் பணத்தை எடுப்பதாகவும் கோவில் பூசகர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பாதுகாப்பு கமெராவில் பதியப்பட்டுள்ள காட்சிகளை வைத்து, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

# அளம்பில் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு

சண்முகன் தவசீலன்

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளம்பில் வடக்கு பகுதியில் நீதிமன்ற அனுமதியுடன் விசேட அதிரடிப் படையினரால் வெடிபொருட்கள் பல மீட்கப்பட்டுள்ளன

விசேட அதிரடிப் படையினரால் குறித்த வெடிபொருட்கள், திங்கட்கிழமை (10) காலை மீட்க்கப்பட்டுள்ளன

இதில் பெரிய பரா-13, சின்ன பரா - 01, 82MM மோட்டார் - 49, 60MM மோட்டார் - 01, ஆர் வி ஜி - 6, கைகுண்டு- 56, தோட்டாக்கள் ஒரு தொகையென பல வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.



விவசாயிகளின் சமகாலப் பிரச்சினைகளுக்கு

# தீர்வுகோரி கவனயீர்ப்பு போராட்டம்

வி. சுகிர்தகுமார்



விவசாயிகளின் சமகாலப்பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகோரி அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேச விவசாய அமைப்புகள் இணைந்து நேற்று (10) மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அக்கரைப்பற்று, மணிக்கூட்டுக்கோபுரம் முன்பாக ஒன்றிணைந்து பல்வேறு சுலோக அட்டைகளைத் தாங்கி, தமது எதிர்ப்பை வெளிப்படுத்திய விவசாயிகள் பேரணியாக அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியூடாக சின்னப்பள்ளிவரை சென்று அங்கிருந்து ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் வரை சென்றனர்.

பிரதேச செயலகம் முன்பாக தமது எதிர்ப்பை வெளியிட்ட விவசாயிகள் அங்கு வருகை தந்த அம்பாரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசனிடமும் உதவி பிரதேச செயலாளர் ஆர். சுபாகரிடமும் கோரிக்கை அடங்கிய மகஜர்களை கையளித்தனர்.

சிறுபோகம் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் நெற்செய்கைக்கான உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதுடன் விளைச்சல் குறைவடைந்தமையால் தாம் பெரும் நட்டத்துக்கு உள்ளாகியுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர். நெல்லின் உத்தரவாத கொள்வனவு விலையை கிலோ கிராம் ஒன்றுக்கு 100 ரூபாயும் காய்ந்த ஈரப்பதனற்ற நெல்லை 120 ரூபாய் வரை அதிகரித்து, விவசாயிகளின் முழு உற்பத்தியையும் அரசு நெற்சந்தைப்படுத்தும் அதிகார சபை மூலம் கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

அம்பாறை மாவட்டத்துக்கு

# புதிய அரசாங்க அதிபர்

பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக சிந்தக்க அபேவிக்கிரம தனது கடமையை திங்கட்கிழமை (10) பொறுப்பேற்றார். இந்தப் பதவியேற்கும் நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீஸன், அம்பாறை மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், பிரதேச உதவி செயலாளர்கள், மாவட்ட செயலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இவர், இதற்கு முன்னர் தொகை மதிப்பு புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




# கம்பஹா பிரதேச சபை

**வாடகை அடிப்படையில் கெப் ரக வண்டி பெற்றுக்கொள்வதற்கான விலைமனு கோரல்**

**கொள்முதல் இலக்கம் – DS/03/2023**

கம்பஹா பிரதேச சபை அலுவலக வேலைகளுக்காக 2023.12.31 ஆம் திகதி வரை 4WD வகையான டபல் கெப் வண்டி வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிபெற்ற வழங்குனர்களிடம் இருந்து விலைமனு கோரப்படுகின்றன.

02. அது சம்பந்தமான விபரங்களை www.gampha.ps.gov.lk என்ற கம்பஹா பிரதேச சபை இணைய தளத்தில் அனுகுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

03. குறிப்பிடப்பட்ட வாடகை வண்டியானது கீழே குறிப்பிடப்பட்ட தரத்தில் இருத்தல் வேண்டும்.

- 2016 – 2020 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட உற்பத்தி செய்யப்பட்ட 2450cc - 30000cc இடையே எஞ்சின் திறன் கொண்ட உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாமம் உடைய மாடலாக இருத்தல் வேண்டும்.
- ஓடோமீட்டர் 150,000 கிமீக்கு குறைவாக இருக்க வேண்டும் மற்றும் டிரான்ஸ்மிஷன் சிஸ்டம் தானியங்கி அல்லது கைமுறையாக இருக்க வேண்டும். முழுமையாக குளிரூட்டப்பட கூடிய வசதியுடன், பவர் ஸ்டீயரிங் (Power Steering), ஆண்டி-லாக் பிரேக்குகள் (ABS), சீட் பெல்ட்கள் மற்றும் டிரைவர் மற்றும் முன் பயணிகளுக்கான ஏர்பேக்குகள் (Air Bags) கொண்ட பாதுகாப்பான வாகனமாக இருக்க வேண்டும்.
- வாடகை வாகனங்களுக்கு காப்பீட்டுடன் முழு காப்பீடு பெற்றிருக்க வேண்டும். (கலவரம், விபத்து, தீ காப்பீடு, இயற்கை பேரிடர், திருட்டு, மூன்றாம் நபர் காப்பீடு குறைந்தபட்சம் ரூ. 03 லட்சமாக இருக்க வேண்டும். தனியார் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை வண்டியில் பயணிக்கு ஒரு நபருக்கு குறைந்தபட்சம் ரூ. 500,000.00 ஆக இருக்க வேண்டும். சாரதிக்கான தொழிலாளர் காப்பீடு இருக்க வேண்டும். பயங்கரவாத பாதுகாப்புக்கான சேர்க்கப்பட்டுள்ளதுடன் மற்றைய இணைப்புகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)
- பழுது பார்த்தல் அல்லது விபத்து ஏற்பட்டால், ஏலதாரர் சரியான நேரத்தில் பழுதுபார்த்து, இயந்திரம் பழுதில்லாமல் இருக்க வேண்டும், வாகனம் துருப்பிடிக்காமல் இருக்க வேண்டும், வாகனத்தின் உட்புறம் திருப்திகரமாக இருக்க வேண்டும் மற்றும் 4WD அமைப்புகள் மற்றும் பாகங்கள் முழுமையாக செயல்பட வேண்டும்.
- சேவை பழுது பார்த்தல், செயலிழப்பு அல்லது விபத்துகள் ஏற்பட்டால், 24 மணி நேரத்திற்குள் இதேபோன்ற வாகனம் வழங்கப்பட வேண்டும்.

04. 10.07.2023 ஆம் திகதி முதல் 31.07.2023 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி முதல் பி.ப 03.00 மணி வரை திருப்பிச் செலுத்தப்படாத ரூ. 1000.00 (ஆயிரம் ரூபாய்) கட்டணத்தை பணமாக செலுத்தி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அபிவிருத்திப் பிரிவிலிருந்து ஏல ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலும் மேலதிக விபரங்களுக்கு 033-2220145 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

05. ஏலப் பாதுகாப்பு தொகையாக ரூ. 25,000.00 (இருபத்தைந்தாயிரம் ரூபா) வை கம்பஹா பிரதேச சபையில் வைப்புச் செய்யப்பட வேண்டும் மற்றும் மேற்படி ரசீதுகள் சீல் செய்யப்பட்ட விலைப்பத்திரங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06. ஏலங்கள் அசல் மற்றும் நகல் ஆக தயார்செய்து 02.08.2023 ஆம் திகதி அன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு "பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை அமுல்படுத்தும் அதிகாரி, கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்தை, முதுன்கொட" என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிவைத்தல் அல்லது கம்பஹா பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடவும். அசல் மற்றும் நகல் கடிதவுறையில் இட்டு கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "வாடகை அடிப்படையில் கெப் ரக வண்டி பெற்றுக்கொள்வதற்கான விலைமனு கோரல்" என குறிப்பிடப்பட வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலை மனுக்கள் கிராகரிக்கப்படும். விலை மனுக் கோரல்கள் பெற்றுக்கொள்ளும் இறுதி நேரம் முடிவடைந்தவுடன் கம்பஹா பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் வருகைத்தந்திருக்கும் ஏலதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் விண்ணப்பங்கள் திறக்கப்படும்.

07. இந்த ஏலங்களை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றத்தின் கொள்முதல் குழுவிடம் உள்ளது.

**எஸ்.ஏ.என்.பீ. சுரவீர**
**பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள், கடமைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரி கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்த, முதுன்கொட.**

10.07.2023

# சமூக வலைத்தளங்கள் தொடர்பிலான தெளிவூட்டல் அவசியம்

முதல்நாள் இடம்பெற்ற முக்கியமான சம்பவங்கள் தொடர்பில், முழு விளக்கத்தை தெரிந்துகொள்வதற்கு, மறுநாள் பத்திரிகைகளை வாசித்த காலம் கொஞ்சம் கொஞ்சமாக மலையேறி கொண்டிருக்கின்றது. நவீன யுகத்தில், திறன்பேசிகளை வைத்திருக்கும் ஒவ்வொருவரும், ஏதோவொரு வகையில் செய்தியாளராக சமூகத்தில் உலாவருகின்றார்.

ஆகையால்தான், அச்சு ஊடகத்தின் மீதான பார்வை குறைந்துகொண்டே வருகின்றது. இதற்கு, வாசிப்பு பழக்கத்தை வழக்கமாகக் கொண்டிராத, இலத்திரனியல் சாதனங்களில் முழுமையாக மூழ்கிக்கிடக்கும் இளம் சமுதாயத்தினர் பொறுப்பாளிகளாக வேண்டும். எனினும், வயது முதிர்ந்தவர்களிடம் வாசிப்பு பழக்கம் இன்னுமே இருக்கத்தான் செய்கின்றது.

தற்போதைய காலக்கட்டத்தில் உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் நடக்கும் அத்தனை சம்பவங்களும் ஒரிரு நொடிக்குள் விரல் நுனிக்கே வந்துவிடுகின்றன. அதிலிருந்து கிடைக்கும் நன்மைகளை விடவும், தீமைகள் அதிகம் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

பௌத்த பிக்குகளின் பாலியல் சீண்டல்கள், பௌத்த தேரர், யுவதி மற்றும் பெண்ணொருவரை நிர்வாணப்படுத்தி தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பிலான செம்மையாக்கப்படாத காட்சிகள் அடங்கிய ஒளிப்பதிவுகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகின. இவை தொடர்பில், இரண்டு தரப்புகளுக்கும் சாதகமான கருத்துகள் பொதுவெளியில் விவாதிக்கப்பட்டன.

சமூக வலைத்தளங்களின் ஊடாக நாட்டின் ஆட்சியே கலைக்கப்பட்டு, ஆட்சிமாற்றம் செய்யப்பட்ட வரலாறுகள் உள்ளன. அதேபோல, அவற்றால் விளையும் தீங்குகளும் அதிகமாகும். மேலே கூறப்பட்ட சம்பவங்கள் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், சாதாரண குடிமகன் சட்டத்தை கையிலெடுத்து தண்டனை வழங்கியிருக்கக் கூடாது.

நிறுவனங்களை சார்ந்திருக்கும் ஊடகங்களுக்கு, ஊடக ஒழுக்கநெறி கோவை இருக்கும். ஆனால், பொதுமக்களிடத்தில் அவை இருக்காது. கண்ணில் காண்பதெல்லாம் செய்திகளாகவே அவர்களுக்குத் தெரியும். ஆகையால், சமூக ஊடகங்களை, மக்கள் தங்களுடைய பிடிக்குள் வைத்துக்கொண்டு ஆக்கிரமிக்க இடமளிக்கக்கூடாது. அவ்வாறான நிலைமை ஏற்படுமாயின், ஊடக ஒழுக்க நெறி, உண்மைத்தன்மை உள்ளிட்ட நெறிமுறைகள் யாவும் கேள்விக்குறியாகிவிடும்.

சமூக ஊடகங்களில் முகப்புத்தகத்தில், நிர்வாணப் படங்கள், ஆக்குரோசத்தை தூண்டும் சம்பவங்கள் தொடர்பில் புகைப்படங்கள், ஒளிப்பதிவுகள், இரத்தம் தோய்ந்த புகைப்படங்கள், தடை செய்யப்பட்ட இயக்கங்கள், நபர்கள், இனங்களுக்கு இடையில் குரோதத்தை தூண்டுதல் தொடர்பில் ஏதாவது பதிவொன்றை ஏற்றினால், அவர்களுடைய முகப்புத்தகம் முடக்கப்படும்.

அதேபோன்றதொரு, நெறிமுறைகளை ஏனைய சமூக ஊடகங்களும் கடைப்பிடிக்குமாயின், நம்பிக்கையை கட்டிக்காக்க முடியும். நமது நாட்டைப் பொறுத்தவரையில், சமூக ஊடகங்கள் தொடர்பில் பலருக்கு போதிய தெளிவில்லை. ஏதாவது குற்றத்தைச் செய்ததன் பின்னர் தண்டனையை வழங்குவதை விடவும், சமூக ஊடகங்களை கையாழும்போது, கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகள், அவற்றை மீறினால் கிடைக்கும் தண்டனை உள்ளிட்டவற்றை சாதாரண மக்களுக்கு தெளிவூட்டினால், சமூக ஊடகங்களிலும் ஊடக ஒழுக்க நெறிமுறையைப் பேணமுடியும் என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.


# தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# கவனமாக கையாள வேண்டிய விவகாரம்

மொஹமட் பாதுஷா

பல இனங்கள், பல மதங்கள், பல கலாசாரங்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும் நாடுதான் இலங்கை என்பதை நாம், கனவிலும் கூட மறந்து விடக் கூடாது. நாட்டில் நடக்கின்ற சம்பவங்களுக்குப் பின்னால், மறைமுக உள்நோக்கங்களும் இருக்கலாம் என்ற அடிப்படையில், ஒவ்வொரு விவகாரத்திலும் பகுத்தறிவைப் பயன்படுத்திச் செயற்பட வேண்டி இருக்கின்றது.

பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஒரு தரப்பு, சிறுபான்மைச் சமூகங்களை நோக்கிய அடக்குமுறைகளை மட்டுமன்றி கிண்டல்களை, விமர்சனங்களை முன்வைக்கின்ற போதோ, இது மறுதலையாக இடம்பெறுகின்ற போதோ, அதனது எதிர்வினையும் விளைவும் நாம் நினைத்துப் பார்க்க முடியாததாக இருக்கும்.

ஒரு குறிப்பிட்ட இனத்தின் அல்லது மதப் பிரிவைச் சேர்ந்த ஒரு சிலர், ஏதாவது கெட்ட காரியங்களில் ஈடுபடுகின்றார்கள் என்பதற்காக, அந்த இனத்தின், மதத்தின் கீழுள்ள எல்லோரும் அப்படிப்பட்டவர்களே என்று அர்த்தம் கிடையாது. இந்தவிடயத்தில் பொறுப்புடனும் பொறுப்புக்கூறலுடனும் ஒவ்வொரு பொதுமகனும் செயற்படுவது, இலங்கை போன்ற நாடுகளில் வேண்டத்தகாத விளைவுகள் ஏற்படுவதைத் தடுக்க உதவும்.

இல்லையென்றால், மானக்கேடான ஒரு காரியத்தை, தவறான செயற்பாட்டை செய்கின்ற இன, மத குழுமத்தைச் சேர்ந்த ஏனைய நல்ல மக்களது மனங்களும் மனம்கோணி விடுவார்கள் என்பதை முன்னுணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆட்டுவிக்கப்பட்ட சிங்கள குழுக்கள், தமிழர்களை இலக்குவைத்து 83 கலவரத்தை முன்னின்று நடத்தின என்பதற்காக, 2010 இற்குப் பிறகு முஸ்லிம்களை நோக்கி இனவாதத்தை கட்டவிழ்த்து விட்டார்கள் என்பதற்காக, சாதாரண சிங்கள மக்கள் எல்லோரும் இனவாதிகள் என வகைப்படுத்த முடியாது.

தமிழ் ஆயுதக் குழுக்கள் பலரைக் கொன்றொழித்தன என்பதற்காக, ஒட்டுமொத்த தமிழர்களையும் 'புலிகள்' என்றோ அல்லது ஈவிரக்கம் அற்றவர்கள் என்றோ யாரும் கூறிவிட இடமளிக்க முடியாது.

அதேபோல், 'சஹ்ரான்' என்ற கும்பல் ஏதோ ஓர் உள்நோக்கில் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நடத்தி மக்களைக் கொன்றார்கள் என்ற காரணத்தை வைத்துக் கொண்டு, சாதாரண முஸ்லிம்களை பயங்கரவாதிகளாக சித்திரிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இது ஒவ்வோர் இன, மதக் குழுமத்தில் உள்ள ஒவ்வொரு சமூகப் பிரிவினருக்கும் பொருந்தும்.

அந்த நாலுபேர் அரசியல்வாதிகளாக இருக்கலாம்; இனவாத, மதவாத, பயங்கரவாத குழுக்களாக இருக்கலாம்; சமூக வலைத்தள தகவல் பரப்பிகளாக இருக்கலாம். கடந்த சில நாள்களாக, ஒருசில பௌத்த துறவிகள் பற்றிய காணொளிகளும் செய்திகளும் சமூக வலைத்தளங்களில் நிரம்பி வழிகின்றன. ஒன்றன் பின் ஒன்றாக நான்கைந்து வீடியோக்கள் பகிரப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சம்பந்தப்பட்ட துறவிகள், இனவாத செயற்பாட்டுக் களத்தில் முன்னே நின்று செயற்பட்டவர்கள் என்ற அடிப்படையில், இவர்களின் முகத்திரையை கிழிப்பதற்காகவும் காரணம் எதுவும் இன்றி பொழுது போக்காகவும் இந்த காணொளிகள் பகிரப்படுவதாகச் சொல்லலாம்.

இலங்கையில், பௌத்த தர்மத்தையும் ஒழுக்கத்தையும் காப்பாற்றும் காவலர்கள் போல தம்மை முன்னிறுத்திச் செயற்பட்டதுடன் அதற்காக இனவாதம் என்ற ஆயுதத்தின் மூலம் குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தை நெருக்குவாரப்படுத்திய ஒரு சிலரது முகத்திரைகளை காலம் கிழிக்கத் தொடங்கியுள்ளது என்பது உண்மைதான்.

ஆனால், பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த துறவிகளுடன் தொடர்புபட்ட இவ்வாறான விடயங்களை, வலைத்தளங்களில் கட்டுங்கடங்காமல் பகிர்வதாலும், கண்டபடி விமர்சிப்பதாலும் நீண்டகாலத்தில் ஏற்படக் கூடிய எதிர்வினைகள், பின்விளைவுகள் பற்றிச் சிந்திக்க வேண்டிய பொறுப்பு மூவின மக்களுக்கும் குறிப்பாக தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உள்ளது.

இந்த வீடியோக்களை பதிவு செய்ததும், கையும் களவுமாக பிடித்ததும் அவற்றை முதலில் சமூக வலைத்தளத்தில் பரப்பிவிட்டதும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஆகவே, இந்தக் குற்றச்சாட்டுகள் முற்றுமுழுதாக சோடிக்கப்பட்டதாக இருப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகும்.

அந்தவகையில், மதத்தின் பெயரைக் கூறிக் கொண்டு, சமூகங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு, திரைமறைவில் மதபோதனைகளுக்கு மாற்றமான செயல்களில் ஈடுபடுகின்ற எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் தண்டிக்கப்பட வேண்டும்.

அதில் 'இவர்களுக்கு' விதிவிலக்கு அளிக்கப்படக் கூடாது என்பதுடன், மதபோதகர்கள் மட்டுமன்றி அரசியல்வாதிகள், முக்கியஸ்தர்கள், அதிகாரமுள்ளவர்கள் என அனைவருக்கும் சட்டம் சமமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆயினும், இந்த தருணத்தில் நிதானித்து ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டியுள்ளது.

இலங்கையில் நடக்கின்ற கிட்டத்தட்ட 90 சதவீதமான சம்பவங்களுக்குப் பின்னால் ஓர் அரசியல் இருக்கின்றது. வெளிநாடுகளின் மறைகரங்கள் இருக்கின்றன. பெருந்தேசிய கட்சிகளின் அரசியல் வெற்றிக்கான காய்கள் இதனூடாக நகர்த்தப்படுகின்றன.

இப்போது பேசப்படுகின்ற விவகாரம் சோடிக்கப்பட்டது என்றோ, திட்டமிட்ட நாடகம் என்றோ யாரும் கூறியதாகத் தெரியவில்லை. என்றாலும் நாட்டில், வேறு சில சம்பவங்கள் திட்டமிட்டு இடம்பெறுகின்றன. அதேபோல், எதேச்சையாக இடம்பெறுகின்ற சம்பவங்கள் கூட, அரசியல் உள்ளிட்ட வேறு மறைமுக நோக்கங்களுக்காக ஊதிப் பெருப்பிக்கப்பட்டு பிரசாரப்படுத்தப்படுகின்றன.

நாட்டில் நிகழ்காலத்தில் பல சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, ஊழல் எதிர்ப்புச் சட்டம், ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் போன்றன விவாதப் பொருளாகியுள்ளன. தொல்பொருள் விவகாரங்களுக்கு இடையில், மனிதப் புதைகுழி விவகாரம் பூதாகரமாகியுள்ளது. இப்படி இன்னும் எத்தனையோ விடயங்கள் பேசு பொருளாகியுள்ளன.

இதற்கிடையில்தான், இவர்கள் கையும் களவுமாக பிடிபட்டிருக்கின்றார்கள். இந்த மானக்கேடான நடவடிக்கைக்கு எதிராக பாராட்சமற்ற நடவடிக்கை எடுக்கப்படுவது உறுதிப்படுத்தப்படுவதுடன், போலி போர்வைகளைப் போர்த்திக் கொண்டு சட்டவிரோத காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு தரப்புக்கும் அது ஒரு பாடமாக அமைய வேண்டும்.

இவ்விவகாரத்தில் அரசாங்கம் சில யதார்த்தங்களை விளங்கிக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட நபர்களின் கடந்தகால இனவாத செயற்பாடுகள், இலங்கையில் சட்டம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக செயற்படுகின்றமை போன்றவற்றை பின்புலமாகக் கொண்டும் இந்த வீடியோக்கள் இவ்வளவு வைரலாகிய விடயத்தை ஆராய வேண்டும்.

அதேவேளை, ஒரு களவான சம்பவத்தை பிடிப்பதற்கு செல்பவர்கள், நூறு சதவீதம் ஒழுக்கமாக, சட்டப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சட்டம் எதிர்பார்த்தாலும், யதார்த்தத்தின்படி அநேகமானவர்கள் பொறுப்புடனும் நெறிமுறையுடனும் நடந்து கொள்வார்கள் எனக் கருத இடமில்லை. இப்படி பல சம்பவங்கள் இதற்கு முன்னரும் நடந்துள்ளன.

எது எவ்வாறிருப்பினும், அந்த வீடியோக்களை சட்டத்துக்கு மட்டும் கொடுக்காமல் சமூக வலைத்தளங்களுக்கு கசிய விட்டதிலும், அதன் பிறகு அதனை கட்டுப்பாடின்றி வலைத்தளங்களில் பகிரவிட்டதிலும் அதனை மையமாக வைத்து இனவெறுப்பான கருத்துகளை பதிவிட்டதிலும் ஆபத்தான தவறுகள் இடம்பெற்று வருகின்றன.

'அவர்கள் தவறு செய்தது குற்றமில்லை. நாங்கள் இதனை பிரபல்யப்படுத்தியதுதான் குற்றமா?' என்று சமூக வலைத்தள பகிர்வாளர்கள் கேட்கலாம். அந்தக் கேள்வியில் நியாயமுள்ளது. ஆயினும், பல்லின நாடொன்றில் அனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியுள்ளது என்ற அடிப்படையில் இதையும் சிந்திக்க வேண்டியுள்ளது.

கடந்த காலங்களில், தமிழர்களில் அல்லது முஸ்லிம்களில் ஒருசிலர் செய்கின்ற தவறைப் பிரசாரப்படுத்தி, சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து, சிங்கள இனவெறுப்பாளர்கள் அவ்விடயத்தை ஊதிப் பெருக்க வைத்தார்கள். அந்தத் தவறை ஒட்டுமொத்த சமூகமும் செய்து விட்டது போலத்தான் அவர்களது செயற்பாடுகள் அமைந்திருந்தன.

இதனால் மன ரீதியாக பாதிக்கப்பட்ட சமூகங்கள் என்ற வகையில் முஸ்லிம்களும் தமிழர்களும் சில விடயங்களை புரிந்து கொள்ள வேண்டும்.

காவியுடைதாரிகள் எவ்வளவு பெரிய தவறுதான் செய்திருந்தாலும், அதனை அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களே ஒளிப்பதிவு செய்து வெளியிட்டிருந்தாலும், அதனை அளவுக்கதிமாக பகிர்வதும் கொச்சையாக கருத்துப் பதிவிடுவதும் ஒருகட்டத்தில் பெரும்பான்மைச் சமூகம் முகம்சுழிப்பதற்கு வழிவகுத்து விடலாம் என்பதையே இப்பத்தி வலியுறுத்த விளைகின்றது.

தூய்மையானவர்கள் போல, எந்தக் குற்றத்துக்கும் அப்பாற்பட்டவர்கள் போல, போலி முகமூடியை அணிந்து கொண்டு இந்த நாட்டில் இன, மத முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு, மூடிய அறைக்குள் அபத்தமான காரியங்களில் ஈடுபடுகின்ற எந்த இன, மதத்தைச் சேர்ந்தவர்களும் பாரபட்சமின்றி தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்காது.

எனவே இதற்கான சட்டப் பொறிமுறையை அரசாங்கம் சரியாக மறுசீரமைத்து அமல்படுத்த வேண்டும். சட்டம் யாருக்கும் எதற்காகவும் பக்கச்சார்பாக செயற்பட இடமளிக்க முடியாது. அதேவேளை, கட்டுக்கடங்காத சமூக வலைத்தளப் பதிவுகளை கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்துவதற்கான சட்டப் பொறிமுறையும் அவசியமாகின்றது.

இந்த வீடியோக்களால், உடனடியாக மக்களின் கவனம் வேறுபக்கம் திசைதிரும்பி உள்ளதாகவே தெரிகின்றது. இந்த நாட்டில் நடக்கின்ற நிகழ்கால நகர்வுகளை மனதில் வைத்துக் கொண்டும், கடந்தகால இன முரண்பாடு தந்த அனுபவத்தின் அடிப்படையிலும், ஒவ்வொரு பொதுமகனும் பொது வெளியில் தமது கருத்துகளை வெளியிட வேண்டும். நமது ஒவ்வொரு செயற்பாட்டின் நீண்டகால விளைவும் என்னவாக இருக்கும் என சிந்தித்து செயற்படுவது நல்லது.

தவறுகள் தவறுகளாக மட்டும் பார்க்கப்பட வேண்டும். இன - மத அடையாளத்தோடு அவை நோக்கப்படக் கூடாது. அதுமட்டுமன்றி, எந்த விதத்திலேனும் இன முரண்பாடுகளுக்கான பொறியைத் தட்டிவைக்கக் கூடிய செயற்பாடுகளில் இருந்து விலகி இருப்பது ஒவ்வோர் இலங்கையரதும் தார்மிகக் கடமையாகும்.



## வாழ்வியல் தரிசனம்

தங்களுக்குரிய காரியங்களை மட்டும் செய்து, சமூகசேவைகள் எதையும் செய்யாதவர், ஆன்மிகம் பற்றிப் பேசுவதில் ஏது பயன்?

நற்செயல்கள் புரிந்தவர்கள் மௌனமாகிவிடுகின்றனர். ஆனால், எதுவுமே செய்யாதவர்கள், பொதுநலன் பற்றிப் பேசுவது வேடிக்கை. பொய்யான பிரசாரங்களை அள்ளி வீசுபவர்கள் சுயநலவாதிகள். தேசத்துக்கு தியாகம் செய்கின்றோம் என்று சொல்லியே தலைவராகி விடுகின்றவர்கள், சாதாரண தொழிலாளி செய்கின்ற பணிகளைக் கூட செய்கின்றார்களா?

கஷ்டப்பட்டே வாழ வேண்டும் என்ற விதி நிரந்தரமாகிவிடக்கூடாது. எனினும் இன்னமும் ஏழ்மை முடிவுக்கு வரவே இல்லை. விலைவாசிகள் அதிகரிக்க இன்று பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. சில பணக்காரர்கள் ஏழைகளுக்கு உதவிபுரிந்துள்ளார்கள். ஆனால், அவர்கள் அதை வெளியில் காட்டிக்கொள்வதில்லை. இவர்களைப் போன்றவர்கள், இரக்கப்படுவதில் உறுதியானவர்கள். சொல்லாமல் செய்வோர் நல்லோர்.

தொண்டு நிறுவனங்களுக்கு பலவிதமான உதவிகளை சாதாரண மக்களும் நல்குகின்றனர். வியாபாரிகள் பொருட்களைப் பதுக்காமல் இருந்தாலே போதும்! பேராசையுடன் பொருட்களைத் தேடுபவர்கள், மற்றவர்களின் நிலைகளை உணரவேண்டும். வையகம் எமக்கானது மட்டுமல்ல; உணர்வார்களா?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நிரந்தர வீடுகளின்றி 4,603 குடும்பங்கள் பெரும் சிரமம்

கிளிநொச்சி மாவட்டத்தில் 4,603 குடும்பங்கள் கடந்த பல ஆண்டுகளாக நிரந்தர வீடுகள் இன்றி தற்காலிக வீடுகளில், பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன. இவர்களில், மீள்குடியேறி வாழ்ந்து வரும் அதிகளவான குடும்பங்கள், 12 வருடங்களுக்கு மேலாக இவ்வாறு தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றன.

2018, 2019 ஆம் ஆண்டில், தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களை பெற்றுக் கொண்டவர்களும் அதற்கான நிதி முழுமையாக கிடைக்காத நிலையில், வீட்டுத்திட்டங்களை பூரணப்படுத்த முடியாமலும் வாழ்ந்து வருகின்றனர்.

அதாவது கிளிநொச்சி மாவட்டத்தில் 33,280 குடும்பங்களுக்கு வீட்டுத் தேவைகள் காணப்பட்ட நிலையில், 24,677 குடும்பங்களுக்கான வீடுகள் இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 2,433 குடும்பங்களும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 1,439 குடும்பங்களும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 104 குடும்பங்களுக்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 627 குடும்பங்கள் என, மாவட்டத்தில் 4, 603 குடும்பங்களுக்கான வீட்டு தேவைகள் காணப்படுகின்றன.

இவ்வாறு 4,952 குடும்பங்களுக்குரிய வீட்டு திட்டங்களை பூரணப்படுத்துவதற்கான கொடுப்பனவாக 1,912.7 மில்லியன் ரூபாய் நிதியை வழங்க வேண்டி இருப்பதாக மாவட்ட திட்டமிடல் அலகால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யது பாஸ்கரன்

# சர்ச்சையில் கஜோல்



ஹிந்தியில் முன்னணி நடிகையாக இருந்துவரும் நடிகை கஜோல் தமிழில் ‘மின்சார கனவு‘ திரைப்படத்துக்கு பிறகு நீண்ட இடைவெளியில் நடிகர் தனுஷ் நடித்திருந்த ‘வேலைக்காரன்‘ திரைப்படத்தில் நடித்திருந்தார்.


அதைத் தொடர்ந்து சட்டம் தொடர்பான புதிய வெப் சீரிஸ் ‘தி ட்ரையல்’ தொடரில் நடித்து முடித்துள்ளார். இந்தத் தொடர் ஹாஸ்டாரில் வரும் 14 ஆம் திகதி வெளியாக உள்ளது.

இந்த நிலையில், அண்மையில் நடிகை கஜோல் பேசிய நேர்காணல் ஒன்றில் ‘படிப்பறிவு இல்லாத அரசியல் தலைவர்கள் இந்தியாவில் உள்ளனர். அவர்கள்தான் நம்மை ஆண்டு வருகின்றனர். அவர்களில் பலருக்கும் கண்ணோட்டம் என்பதே இல்லை. அது கல்வி மூலம்தான் கிடைக்கும். கல்வி குறைந்தபட்சம் மாறுபட்ட கண்ணோட்டத்துக்கான வாய்ப்பையாவது கொடுக்கும்‘ என்று கூறியிருந்தார்.

நடிகை கஜோலின் இந்தக் கருத்துக்கு சமூக வலைத்தளங்களில் சில ரசிகர்கள் ஆதரவு அளித்திருந்தாலும் அரசியல் மட்டத்தில் பல்வேறு சர்ச்சையை இது சந்தித்து வந்தது. இந்த நிலையில் நடிகை கஜோல் தனது கருத்து விளக்கம் அளித்திருக்கிறார்.

அதில், ‘யாரையும் இழிவுபடுத்தும் நோக்கத்தில் இதனைத் தெரிவிக்கவில்லை. கல்வி மற்றும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றித்தான் கருத்து தெரிவித்தேன். எனக்கு எந்த அரசியல் தலைவரையும் இழிவுப்படுத்தும் நோக்கம் கிடையாது. நாட்டை சரியான பாதையில் வழிநடத்தும் சில சிறந்த தலைவர்கள் நம்மிடம் உள்ளனர்‘ என்று டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.


# மீண்டும் வில்லனாகும் விஜய் சேதுபதி



தமிழில் ரஜினிகாந்த் நடித்த ’பேட்ட’ விஜய் நடித்த ’மாஸ்டர்’ மற்றும் கமல்ஹாசன் நடித்த ’விக்ரம்’ ஆகிய திரைப்படங்களில் வில்லனாக நடித்த விஜய் சேதுபதி ஏற்கெனவே தெலுங்கில் ’உப்பெனா’ என்ற படத்தில் வில்லனாக நடித்திருந்தார்.

இந்த நிலையில் தெலுங்கு திரையுலகில் மீண்டும் வில்லனாக விஜய் சேதுபதி நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

பிரபல தெலுங்கு நடிகர் ராம்சரண் தேஜா நடிக்கும் அடுத்த படம் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாக உள்ளது. இந்த படத்துக்கு ஏஆர் ரகுமான் இசையமைக்க இருப்பதாகவும் நீண்ட இடைவேளைக்கு பின்னர் அவர் தெலுங்கில் இசையமைக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.



# நடிகையின் மவுசு...!

சிங் சாப் தி கிரேட் என்ற ஹிந்தி படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமான ஊர்வசி ரவுத்தலா, தி லெஜண்ட் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார்.

தற்போது ஹிந்தியில் பிசியாக நடித்து வரும் ஊர்வசி ரவுத்தலா, அவ்வப்போது தெலுங்கு படங்களில் கவர்ச்சி நடனம் ஆடி வருகிறார். அந்த வகையில், தற்போது தெலுங்கு படம் ஒன்றில் கவர்ச்சி நடனம் ஆட அவர் ஒரு நிமிடத்திற்கு ரூ.1 கோடி சம்பளம் கேட்டுள்ளார்.

தெலுங்கில் பாயபட்டி சீனு இயக்கத்தில் ராம் பொத்தினேனி நடிக்கும் படத்துக்காக அவர் இவ்வளவு பெரிய தொகையை சம்பளமாக கேட்டுள்ளாராம்.

இதன்மூலம் இந்தியாவிலேயே அதிக சம்பளம் வாங்கும் நடிகையாக ஊர்வசி ரவுத்தலா உருவெடுத்து உள்ளதாக கூறப்படுகிறது.

அவர்கேட்ட தொகையை கொடுத்து படக்குழுவும் அவரை புக் செய்துவிட்டதாம்.

# மாஸ் காட்டும் ‘மாவீரன்’



சிவகார்த்திகேயன் நடித்த ‘மாவீரன்’ திரைப்படம் வரும் வெள்ளிக்கிழமை வெளியாக உள்ளது. தமிழ் மட்டுமின்றி இந்த படம் தெலுங்கிலும் ரிலீஸ் ஆகவுள்ளதால் ஆந்திராவிலும் இந்த படத்தை படக்குழுவினர் ப்ரமோஷன் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த படத்தின் கிளைமாக்ஸ் காட்சி குறித்த தகவல் வெளியாகி உள்ளது. கிளைமாக்ஸ் ஸ்டண்ட் காட்சி ஒரே ஷாட்டில் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. தமிழ் சினிமாவில் சிங்கிள் சாட்டில் கிளைமாக்ஸ் ஸ்டண்ட் காட்சி எடுக்கப்பட்டது இதுதான் முதல் முறை என்றும் கூறப்படுகிறது.

சிவகார்த்திகேயன் மற்றும் வில்லன் நடிகர்கள் மோதிய இந்த ஸ்டண்ட் காட்சியை திரையில் பார்க்க ரசிகர்கள் மிகவும் ஆர்வத்துடன் உள்ளனர். ஏற்கெனவே இந்த படத்தில் வில்லனாக நடித்துள்ள இயக்குனர் மிஷ்கின் நடிப்பில் மிரட்டி இருக்கிறார் என்று கூறப்பட்ட நிலையில் இந்த கிளைமாக்ஸ் ஸ்டண்ட் காட்சி குறித்த தகவல் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

சிவகார்த்திகேயன் ஜோடியாக அதிதி ஷங்கர் நடித்துள்ள ‘மாவீரன்’ படத்தில் மிஷ்கின், யோகி பாபு, சுனில், சரிதா, மோனிஷா உள்பட பலர் நடித்துள்ளனர்.

பரத் ஷங்கர் இசையமைத்துள்ளார். இந்த படத்தை ‘மண்டேலா’ படத்தை இயக்கிய மடோன் அஸ்வின் இயக்கியுள்ளார்.




# வவுனியாவில் ‘மலையகம் 200’



வவுனியாவில் ‘மலையகம் 200’ என்ற நூல் வெளியீடு, வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில், வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம். பி நடராஜா தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், இரா. சுப்பிரமணியம் எழுதிய இந்த வரலாறு நூல் வெளியீட்டு நிகழ்வில், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி, உப தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் எம்.பி, கு. திலீபன் எம்.பி உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

க. அகரன்

# நீர்கொழும்பு மீனவர் சங்கம் அம்பாறை விஜயம்



கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட, நீர்கொழும்பை தளமாகக் கொண்டு செயற்படுகின்ற அகில இலங்கை மீனவர் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு மருதமுனை -06, மக்பூலியா மீன்பிடி சங்கத்தால் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சர்மில் ஜஹானின் ஒருங்கிணைப்பில், மக்பூலியா மீன்பிடி சங்க தலைவர் எம். ஐ. எம் பாறுக் தலைமை தாங்கிய இந்நிகழ்வில், அகில இலங்கை மீனவர் தொழிற்சங்கத்தின் பொது செயலாளர் டினேஸ் ரஞ்சன் பேர்னாண்டோ, தலைவர் அருண் ரொசாந்த, தேசிய அமைப்பாளர் பிரசன்ன பெர்னாண்டோ உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர். இந்தச் சந்திப்பில் காரைதீவு, சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேச மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பாறுக் ஷிஹான்

சென் பீற்றர்ஸ் தேவாலய

# படுகொலை நினைவுகூரல்



நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 28 ஆம் ஆண்டு நினைவுதினம், ஞாயிற்றுக்கிழமை (09) தேவாலயத்தில் நினைவு கூரப்பட்டது.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றதைத் தொடர்ந்து, உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒன்பதாம் திகதி, தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் கோவிலிலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் பலியானதுடன் 350க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.

நிதர்சன் வினோத்

லீனத் பாலர் பாடசாலையின்

# பட்டமளிப்பு விழாவும் வருடாந்த நிகழ்வும்



கல்முனை லீனத் பாலர் பாடசாலை சிறுவர் சிறுமியரின் பட்டமளிப்பு விழாவும், வருடாந்த நிகழ்வும் பாலர் பாடசாலையின் ஸ்தாபகரும் அதிபருமான எஸ். தஸ்லி உம்மா தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் பிரதி மேயரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூரும் கௌரவ அதிதியாக கல்முனை அஸ்-ஸூஹறா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி எம்.எச்.எஸ். ஆர் மஜீதியாவும் கலந்து சிறப்பித்தனர்.

நூருல் ஹுதா உமர்

சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த

# பொது அறிவு இறுதிப்போட்டி




சிவாநந்தியன் பட்டமுன் (Under Graduates) மாணவர் சங்கத்தால் 15 ஆவது முறையாக நடத்தப்பட்ட சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த சவால் கிண்ண மாவட்ட மட்ட பொது அறிவு வினா விடைச்சமர் போட்டியில், காத்தான்குடி மத்திய கல்லூரியும் வின்சன் மகளிர் கல்லூரியும் இறுதிப்போட்டிக்கு தெரிவாகின.

மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலய மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடத்தப்பட்ட இறுதிப் போட்டியில் வின்சன் உயர்தர மகளிர் கல்லூரி 265 புள்ளிகளை பெற்று முதலிடத்தையும் காத்தான்குடி மத்திய கல்லூரி 235 புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இந் நிகழ்வில், ஆன்மிக அதிதியாக ஸ்ரீமத் சுவாமி நீலமாதவாநந்தா ஜீ மகராஜும் பிரதம அதிதியாக மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியமும் கலந்து கொண்டனர்.

ரீ.எல் ஜவ்பர்கான்



வாச்சிக்குடா

# பஞ்சமுக ஆஞ்சநேயர் மகாகும்பாபிஷேகம்

அக்கரைப்பற்று, வாச்சிக்குடா பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தான புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் ஞாயிற்றுக்கிழமை (09), ஆலய ஸ்தாபகர் கந்தசாமியின் தலைமையில், சிவாச்சார்யா காலபவனமணி வாமதேவ சிவாச்சார்யார் சிவஸ்ரீ புண்ய கிருஷ்ணகுமாரக்குருக்கள் பிரதிஷ்டா பிரதமகுருவாகவிருந்து வழிநடத்தியதுடன் ஆரியபாஷா விற்பன்னர் ஈசானச்சிவாச்சாரியார் சிவஸ்ரீ க.கு.சச்சிதானந்தசிவம் குருக்கள் சர்வபோதனமாகவும் சாதகாசிரியர்களாக சிவஸ்ரீ பத்மநிலோஜ ஈசானசிவம், ஆலய பிரதமகுரு த. குகனேஸ்வர சர்மா உள்ளிட்ட குருமார்கள் இணைந்து கும்பாபிசேக கிரியைகளை நடத்தி வைத்தனர்.

வி. சுகிர்தகுமார்

# மன்னாரில் பொலிஸ் அணிவகுப்பு மரியாதை



மன்னார் தலைமை பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பரிசீலனை மற்றும் அணிவகுப்பு மரியாதை நிகழ்வு திங்கட்கிழமை (10), மன்னார் பொலிஸ் விளையாட்டு மைதானத்தில், மன்னார் தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.பி ஜெயதிலக்க தலைமையில் நடைபெற்றது. மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.வை.ஏ.எஸ் சந்திரபால பரிசீலனைகளை மேற்கொண்டதோடு, பொலிஸ் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இதன்போது, பொலிஸ் அத்தியட்சகர் எச்.எம்.சி.பி ஹேரத், உதவி பொலிஸ் அத்தியட்சகர் விதானகே, மன்னார் மாவட்ட சகல பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து மன்னார் நகரின் ஊடாக, பொலிஸ் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது.

எஸ். றொசேரியன் லெம்பேட்

உக்ரேன்

# உக்ரேனுக்கு அமெரிக்காவின் கொத்தனி குண்டுகள்

உக்ரேனுக்கு கிளஸ்டர் குண்டுகளை வழங்கும் அமெரிக்காவின் முடிவுக்கு கனடா உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடுத்து 500 நாள்கள் நிறைவடைந்துள்ள நிலையில், உக்ரேனுக்கு கிளஸ்டர் குண்டுகள் எனப்படும் கொத்து குண்டுகளை வழங்க அமெரிக்கா முடிவெடுத்துள்ளது.

போர் தொடர்ந்து வரும் நிலையில் உக்ரேன் வசம் வெடிமருந்துகள் குறைந்து வருகின்றன. இதனால், ஆயுதங்களை வழங்கும்படி அமெரிக்காவிடம் உக்ரேன் உதவி கோரியது. இதையடுத்து, உக்ரேனுக்கு கிளஸ்டர் குண்டுகளை வழங்க பைடன் ஆணையிட்டுள்ளார்.

இந்தக் கிளஸ்டர் குண்டுகளின் பயன்பாடு மற்றும் தயாரிப்பை



120 க்கும் மேற்பட்ட நாடுகள் தடை செய்துள்ளன. கிளஸ்டர் குண்டுகள், வெடிக்கும்போது அதில் இருந்து பல குண்டுகள் காற்றில் சிதறும். அந்த குண்டுகள் மோசமான பாதிப்புகளையும், உயிரிழப்புகளையும் ஏற்படுத்தும். சில குண்டுகள் உடனடியாக வெடிக்காமல் இருக்கும். யாரும் எதிர்பாராத வேளையில் வெடித்து அதிக உயிரிழப்பை ஏற்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

மெக்சிகோ

## மனைவியை கொன்று மூளையை ருசித்த கணவன்



மெக்சிகோவின் ப்யூப்லா என்ற பகுதியை சேர்ந்தவர் 32 வயதான அல்வாரோ. இவரது மனைவி மரியா. இந்த இருவருக்கும் கடந்தாண்டு தான் திருமணம் நடைபெற்றுள்ளது. மரியாவுக்கு ஏற்கெனவே இருந்த உறவு மூலம் 5 குழந்தைகள் உள்ளனர். கட்டுமான தொழிலாளரான அல்வாரோ மது மற்றும் போதை பழக்கத்திற்கு அடிமையானவர். இருவருக்கும் திருமணமாகி ஓராண்டு காலம் கூட ஆகாத நிலையில், அல்வாரோ தனது மனைவியை தொடர்ந்து அடித்து துன்புறுத்தி வந்துள்ளார்.

அத்துடன் மரியாவின் மகள்களை அல்வேரோ பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கியதாகவும் கூறப்படுகிறது. இவரின் செயல்களை தாங்க முடியாமல் மரியாவின் இரு மகள்கள் தாய் வழி பாட்டி வீட்டில் வாழ்ந்து வந்துள்ளனர். இந்நிலையில் தான் கடந்த ஜூன் 29ஆம் திகதி கொடூர செயலில் ஈடுபட்டுள்ளார். தனது மனைவியை கொலை செய்த இவர், அவரது உடலை பல துண்டுகளாக வெட்டி பிளாஸ்டிக் பைகளில் வைத்துள்ளார். அத்துடன் மரியாவின் மூளையை நர மாமிசமாக சாப்பிட்டுள்ளார். அத்துடன் மனைவியின் மண்டை ஓட்டை சிகரெட் ஆஷ் டிரேவாக பயன்படுத்தியுள்ளார். இந்தக் கொடூர கொலை நடந்து இரு நாள் கழித்து மரியாவின் மகளை அழைத்து அவரை கொன்றுவிட்டேன் என ஒப்புக்கொண்டுள்ளார். தகவல் அறிந்த பொலிஸார் ஜூலை 2ஆம் திகதி அல்வாரோவை கைது செய்தனர்.

## காதலிக்க மறுத்த யுவதியை உயிரோடு புதைத்த இளைஞர்



இந்திய வம்சாவளியை சேர்ந்த இளம்பெண்ணை அவரது முன்னாள் காதலர் பழி வாங்கும் நடவடிக்கையாக உயிருடன் புதைத்து கொலை செய்துள்ள சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய வம்சாவளியை சேர்ந்த ஜாஸ்மின் கவுர் என்ற 21 வயதாகும் தாதி மாணவி அவுஸ்திரேலியாவின் அடிலெய்டில் படித்து வந்தார். அவருக்கும், தாரிக்ஜோத் சிங் என்பவருக்கும் இடையே 2 ஆண்டுகளுக்கு முன்பாக காதல் ஏற்பட்டுள்ளது.

பின்னாளில் இருவருக்கும் இடையே அவ்வப்போது கருத்து வேறுபாடு ஏற்பட்டு வாக்குவாதம் முற்றியுள்ளது. ஒரு கட்டத்தில் தாரிக்ஜோத்தை ஜாஸ்மீன் தனக்கு வேண்டாம் என்று ஒதுக்கியுள்ளார். இருப்பினும், ஜாஸ்மின் மீது வெறியாக இருந்த தாரிக்ஜோத் சிங், தன்னை வேண்டாம் என ஒதுக்கும் ஜாஸ்மினை பழிவாங்க 2021 ஆம் ஆண்டு காரில் கடத்திக் கொண்டு சென்றுள்ளார்.

அப்போது 4 மணிநேரமாக காருக்குள்ளே இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த தாரிக்ஜோத் சிங், முடிவில் கேபிள் வயர்களால் ஜாஸ்மினை கட்டிப்போட்டு, அவரை குழி ஒன்றில் இறக்கி உயிருடன் புதைத்து விட்டார். இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் தற்போது தாரிக்ஜோத் சிங் தனது குற்றத்தை நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டுள்ளார் அவருக்கு ஆயுள் தண்டனையை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

தெலுங்கானா

## தவளைகளுக்கு திருமணம்




போதிய மழை வேண்டி விவசாயிகள் தவளைகளுக்கு திருமணம் செய்து வைப்பர். இது பராம்பரியமாக சில காலங்களுக்கு முன்பு வரை செய்து இருந்தாலும், இந்த நூற்றாண்டிலும் இதுபோன்ற நிகழ்வுகளை நடைபெறுகின்றன.

தெலுங்கானா மாநிலத்தை சேர்ந்த ரஞ்சனா சிர்சிலா மாவட்டத்தில் இருக்கக்கூடிய வேமுலவாடா ஊராட்சி பகுதியை சேர்ந்த திப்பாப்பூர் கிராம மக்கள் இரு தவளைகளுக்கு இடையே திருமணத்தை நடத்தி வைத்தனர்.

சடங்கின் ஒரு பகுதியாக தவளைகளை சாணியில் முக்கி, கிராமத்திற்கு வெளியே இருக்கக்கூடிய குளத்தில் விடுவார்கள். இவ்வாறு செய்வது வருணன் கடவுளை மகிழ்ச்சி அடைய செய்து, அதன் மூலமாக தங்களுக்கு கடவுள் மழை பொழிய செய்வார் என்பது இவர்களது நம்பிக்கையாக உள்ளது.

உத்தரப் பிரதேசம்

## ஒன்றரை இலட்சத்துடன் மரமேறிய குரங்கு



உத்தரப் பிரதேச மாநிலம் சாஹாபாத் பகுதியில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்துக்கு வெளியே, சராபத் ஹுசைன் என்பவர் தனது மொட்டார் சைக்கிளை நிறுத்தியுள்ளார். அந்தச் சைக்கிளில் 1.5 இலட்சம் ரூபாய் ரொக்கப் பணம் இருந்துள்ளது.

இவர் அருகே சென்ற நேரம் பார்த்து, அங்கிருந்த குரங்கு, மோட்டார் சைக்கிளின் அருகே வந்து நோட்டமிட்டது. பின்னர் பணம் இருந்த பையை தூக்கிக்கொண்டு ஓடியது. இதை சராபத் மற்றும் அங்கிருந்தவர்கள் கவனித்துவிட்டனர். பதறிப் போன சராபத், குரங்கு எங்கே சென்றது என மூச்சிரைக்க ஓடி தேடினார்.

பின்னர் தான் மாயமான அந்த குரங்கு அருகே உள்ள மரத்தில் ஏறிக்கொண்டது தெரிந்தது. பெரும் போராட்டத்திற்குப் பின்னர் அதனிடம் இருந்த பையை மீட்டு எடுத்தார் சராபத்.

ஆந்திரா

## கல்யாண ராணி வசமாக மாட்டினார்

ஆந்திர மாநிலத்தை சேர்ந்த அசோக் சைத்தன்யா, ஆவடியில் தனியார் நிறுவன வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார். 33 வயதாகியும் திருமணம் ஆகவில்லை. பெற்றோரின் அறிவுறுத்தலின்படி தெலுங்கு மேட்ரிமோனியில் தனது சுய விவரத்தை பதிவேற்றம் செய்தார். அதே வலைதள பக்கத்திலிருந்த, சந்தியா என்பவரை அசோக் சைதன்யாவுக்கு பிடித்து போக இருவரும் பேசி வந்தனர். தனது புகைப்படம் எனக் கூறி சினிமா நடிகை ஒருவரின் புகைப்படத்தை அனுப்பியுள்ளார் சந்தியா.

புகைப்படத்தை பார்த்து அழகில் மயங்கிய அசோக் சைதன்யா, சந்தியா கேட்கும் போதெல்லாம் பணம் கொடுத்துள்ளார். பல தவணைகளில் 10 இலட்சம் ரூபாய் பணத்தை கொடுத்துள்ளார். திருமணம் குறித்து பேசும்போது மட்டும் சந்தியா, மறுப்பு தெரிவிப்பாராம்.

இந்நிலையில், திருமணத்திற்கு அசோக் சைதன்யா வற்புறுத்த அவரது தொலைபேசி எண்ணை புளொக் செய்துள்ளார். அசோக் சைதன்யா ஆவடி பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார். விசாரணையில் இந்தப் பெண் இவ்வாறு பலரை ஏமாற்றியுள்ளமை தெரிவந்தது.




உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளின் இறுதிப் போட்டியில்

# நெதர்லாந்தை வீழ்த்திய இலங்கை

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில், ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற நெதர்லாந்து உடனான இறுதிப் போட்டியில் இலங்கை வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நெதர்லாந்தின் அணித்தலைவர் ஸ்கொட் எட்வேர்ட்ஸ், முதலில் இலங்கையைத் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை விக்ரம்ஜிட் சிங்க் (2), சஹிப் சுல்ஃபிஹார் (2), லோகன் வான் பீக் (2), றயான் கிளெய்ன் (2), அர்யன் டுட்டிடம் குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளை இழந்த நிலையில், சஹான் ஆராச்சிகேயின் 57 (71), குசல் மென்டிஸின் 43 (52), சரித் அஸலங்கவின் 36 (36), வனிடு ஹஸரங்கவின் 29 (21) ஓட்டங்களோடு 47.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 233 ஓட்டங்களையே பெற்றது.

பதிலுக்கு 234 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து, டில்ஷான் மதுஷங்க (3), வனிடு ஹஸரங்க (2), மகேஷ் தீக்ஷனவிடம் (4) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 23.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 105 ஓட்டங்களையே பெற்று 128 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மதுஷங்கவும், தொடரின் நாயகனாக ஷோன் வில்லியம்ஸும் தெரிவாகினர்.

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடர்:

## வென்ற சென். ஜோன்ஸ், சென். அந்தனிஸ்

Dialog SCHOOLS RUGBY


டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில், நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். அந்தனிஸ் கல்லூரி ஆகியன வென்றுள்ளன.

பல்லேகலவில் நடைபெற்ற கிங்ஸ்வூட் கல்லூரியுடனான போட்டியில் 48-15 என்ற புள்ளிகள் கணக்கில் சென். ஜோசப் வென்றது.

இதேவேளை, றோயல் வளாகத்தில் நடைபெற்ற வெஸ்லிக் கல்லூரியுடனான போட்டியில் 30-29 என்ற புள்ளிகள் கணக்கில் சென். அந்தனிஸ் வென்றது.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான

## மூன்றாவது டெஸ்டை வென்ற இங்கிலாந்து



அவுஸ்திரேலியாவுக்கெதிரான மூன்றாவது ஆஷஸ் டெஸ்டை இங்கிலாந்து வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் வென்ற அவுஸ்திரேலியா, லீட்ஸில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த இப்போட்டியில் தோற்றபோதும் 2-1 என முன்னிலை வகிக்கிறது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

அவுஸ்திரேலியா: 263/10 (துடுப்பாட்டம்: மிற்செல் மார்ஷ் 118, ட்ரெவிஸ் ஹெட் 39 ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க் வூட் 5/34, கிறிஸ் வோக்ஸ் 3/73, ஸ்டுவர்ட் ப்ரோட் 2/58)

இங்கிலாந்து: 237/10 (துடுப்பாட்டம்: பென் ஸ்டோக்ஸ் 80, ஸக் குறொலி 33, மார்க் வூட் 24 ஓட்டங்கள். பந்துவீச்சு: பற் கமின்ஸ் 6/91, மிற்செல் ஸ்டார்க் 2/59, மிற்செல் மார்ஷ் 1/9, டொட் மேர்பி 1/36)

அவுஸ்திரேலியா: 224/10 (துடுப்பாட்டம்: ட்ரெவிஸ் ஹெட் 77, உஸ்மான் கவாஜா 43, மர்னுஸ் லபுஷேன் 33, மிற்செல் மார்ஷ் 28, மிற்செல் ஸ்டார்க் 16, டொட் மேர்பி 11 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஸ்டுவர்ட் ப்ரோட் 3/45, கிறிஸ் வோக்ஸ் 3/68, மொயின் அலி 2/34, மார்க் வூட் 2/66)

இங்கிலாந்து: 254/7 (துடுப்பாட்டம்: ஹரி ப்ரூக் 75, ஸக் குறொலி 44, கிறிஸ் வோக்ஸ் ஆ.இ 32, மார்க் வூட் ஆ.இ 16 ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 5/78, மிற்செல் மார்ஷ் 1/23, பற் கமின்ஸ் 1/77)

போட்டியின் நாயகன்: மார்க் வூட்

## சம்பியனான முனைக்காடு இராமகிருஸ்ணா

வ. திவாகரன்







உயிர்நீத்த உறவுகளின் ஞாபகார்த்த கால்பந்தாட்டத் தொடரில் முனைக்காடு இராமகிருஸ்ணா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

இராமகிருஸ்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற 36 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் மகிழடித்தீவு மகிழை இளைஞர் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே இராமகிருஸ்ணா சம்பியனானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 11 ஜூலை 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.